# தமிழ்நாடு அரசு

# இந்து சமய அறநிலையத்துறை,

# உதவி ஆணையர் அலுவலகம், புதுக்கோட்டை

## வேலைவாய்ப்பு விளம்பர அறிவிப்பு

**ந.க.எண்.3589/2020/ அ4 நாள்: 28.03.2022**

புதுக்கோட்டை இந்து சமய அறநிலையத்துறை, உதவி ஆணையர் அலுவலகம் மற்றும் உதவி ஆணையர் அலுவலகத்துடன் இணைந்த ஆய்வாளர் அலுவலகங்களில் காலியாக உள்ள கீழ்கண்ட பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்தவர்களிடம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, கல்வித் தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். தகுதியுள்ள விண்ணப்பதாரருக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும். பணிநியமனம் முற்றிலும் தற்காலிகமானது.

| | | |
|---|---|---|
| பணியின் பெயர் | அலுவலக உதவியாளர் | |
| பணியிடம் | உதவி ஆணையர் அலுவலகம், புதுக்கோட்டை | |
| சம்பள விகிதம் | நிலை–1 ரூ.15,700 – 50,000/– | |
| குறைந்தபட்ச கல்வித்தகுதி | 8– ம் வகுப்பு தேர்ச்சி | காலியிடங்கள் |
| இட ஒதுக்கீடு (காலியிடம் –7) | 1)பொதுப்போட்டி – பொது – முன்னுரிமை பெற்றவர். (GT–GL–Priority) | 1 |
| | 2)ஆதிதிராவிடர்– அருந்ததியினர்– பெண்கள் – ஆதரவற்ற விதவை (SCAW–DW) | 1 |
| | 3) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு – பொது – முன்னுரிமை பெற்றவர். (MBC–GL– Priority) | 1 |
| | 4) பிற்படுத்தப்பட்ட வகுப்பு – பொது – முன்னுரிமை பெற்றவர். (BC–GL– Priority) | 1 |
| | 5 (பொதுப்போட்டி – பெண்கள் – ஆதரவற்ற விதவை (GT–W–DW) | 1 |
| | 6) ஆதிதிராவிடர் – பொது – முன்னுரிமை பெற்றவர். | 1 |

| | | |
|---|---|---|
| | (SC-GL-- Priority) | |
| | 7) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு -• பெண்கள் - ஆதரவற்ற விதவை (MBC&DNC -W-DW) | 1 |
| மொத்த பணியிடங்கள் | | 7 |

## <u>முன்னுரிமை</u>

1. GT Priority – கொரோனா தொற்றினாலோ, இதர காரணங்களாலோ பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகன்/மகள்). அரசாணை நிலைஎண்.8, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள்.10.01.2000ல் தாயையும் தந்தையையும் இழந்த வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்ட முன்னுரிமை இவ்வினத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.
2. MBC and DNC Priority – முதல் தலைமுறை பட்டதாரிகள்
3. BC Priority – தமிழக அரசுப்பள்ளிகளில் தமிழ்மொழியில் பயின்ற நபர்கள்
4. SC Priority – போரில் உடல்தகுதி இழந்த முன்னாள் இராணுவத்தினர் (அரசாணை நிலை எண்.134, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள்.19.03.1990-ல் வழங்கப்பட்ட முன்னுரிமை).

| **01.01.2022-இல் வயது வரம்பு** | **SC/ST** | **GT** | **MBC/DNC** | **BC** |
|---|---|---|---|---|
| அதிகபட்ச வயது | 37 | 32 | 34 | 34 |
| குறைந்தபட்ச வயது | 18 | 18 | 18 | 18 |
| • அரசு விதிகளின்படி வயது வரம்பு தளர்வு அனுமதிக்கப்படும் | | | | |
| **<u>*முன்னுரிமை சான்றுகள் (Priority Certificate)</u>**<br>1. ஆதரவற்ற விதவை சான்று<br>2.போரில் உடல் தகுதியை இழந்த முன்னாள் படைவீரர் சான்று<br>3. முதல் தலைமுறை பட்டதாரிகள் சான்று | | 4. தமிழக அரசுப்பள்ளிகளில் தமிழ்மொழியில் பயின்ற நபர்கள்<br>5. கொரோனா தொற்றினாலோ, இதர காரணங்களாலோ பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகன்/மகள்) சான்று | | |

மேற்கூறிய தகுதியுள்ள இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் 28.04.2022 மாலை 05.30 மணிக்குள் கீழ்காணும் ஆவணங்களின் நகல்களில் சான்றிட்டும் புகைப்படத்துடன் சுயவிலாசமிட்ட ரூ.25/-க்கான தபால் தலை ஒட்டிய கவர் ஒன்றுடன் கீழ்கண்ட முகவரிக்கு உரிய விண்ணபத்தில் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும். இருப்பிட முகவரி, அஞ்சல் குறியீட்டு எண். கைபேசி எண் ஆகியவற்றை தெளிவாகவும் அலுவலக உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம் செய்பவர் விண்ணப்ப உறையில் "**அலுவலக உதவியாளர்**" என முகவரி குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட தேதிக்குள் வரப்பெறாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**<u>இணைத்து அனுப்ப வேண்டிய விவரங்கள்:-</u>**

1. விண்ணப்பதாரர் பெயர், சுய விபரம் மற்றும் முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)
2. எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான கல்விச் சான்று நகல்
3. பள்ளி மாற்றுச் சான்று நகல்
4. சாதிச் சான்று நகல் (வட்டாட்சியரால் வழங்கப்பட்டது)
5. புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த பதிவு எண், பதிவுச் சான்றின் நகல்
6. குடும்ப அடையாள அட்டை நகல்
7. முன்னுரிமைக்கான சான்றின் நகல் (Priority Certificate)
8. இதர தகுதிகள் ஏதுமிருப்பின் அதன் விவரம் மற்றும் நகல்
9. சுயவிலாசமிட்டு தபால்தலையுடன் உறை – 1

**<u>குறிப்பு:</u>**

விண்ணப்ப படிவம் அலுவலக விளம்பர பலகை மற்றும் www.hrce.tn.gov.in website –ல் பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

**<u>விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:</u>**

உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
தெற்கு ராஜ வீதி, பழைய நகராட்சி அலுவலகம் அருகில்,
புதுக்கோட்டை– 622 001.

**<u>விண்ணப்பப் படிவம்</u>**

PHOTO

பெயர் :

முகவரி :

கல்வித் தகுதி :

(சான்று இணைக்கப்படவேண்டும்)

பிறந்த தேதி / வயது :

சமயம் : **இந்து**

சாதி : SC / SCA / MBC / DNC / BC / OC

(சான்று இணைக்கப்படவேண்டும்)

முன்னுரிமையின் விபரம் :

(Priority Certificate)

இதர தகுதிகள் விபரம் :

தொலைபேசி/கைப்பேசி எண :

விண்ணப்பிக்கும் பணியின் பெயர் :

(ஒவ்வொரு பணியிடத்திற்கும்
தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்)

இடம் :

நாள் :

விண்ணப்பதாரர் கையொப்பம்

**இணைப்புகள்:**

1. கல்வி தகுதி சான்றின் நகல்கள்
   (TC & Mark Sheet)
2. சாதிச்சான்று நகல் (வட்டாட்சியரால் வழங்கப்பட்டது)
3. குடும்ப அடையாள அட்டை நகல்
4. முன்னுரிமைக்கான சான்றின் நகல்
   (Priority Certificate)
5. ஆதார் அட்டை நகல்
6. வேலை வாய்ப்பு பதிவு அட்டை நகல்
7. சுயவிலாசமிட்ட ரூ.25/-க்கான தபால் தலையுடன் கூடிய உறை.